REFERENCE COPY
TAMIL NADU LEGISLATURE
20 DEC 1982
MADRAS-600 009

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1982 மார்ச் 15.

பங்குனி 2, துன்மதி திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''உடைய ரெனப்படுவது ஊக்கம் அஃதில்லார்
உடையது உடையரோ மற்று.''

ஒருவர் பெற்றிருக்கின்றார் என்று சொல்லத்தக்க சிறப்புடையது ஊக்கமாகும்; ஊக்கம் இல்லாதவர் வேறு எதைப் பெற்றிருந்தாலும் அதை உடையவர் ஆவாரோ ?

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கரூர் தாலுக்காவை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்.

*வினா எண். 497—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சி மாவட்டம் கரூர் தாலுக்காவை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பிரிக்கப்படும் ?

(இ) எத்தனை வருவாய் கிராமங்கள் புதிய தாலுக்காவில் சேர்க்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) மற்றும் (ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) 57 வருவாய் கிராமங்கள்.

திரு. எம். சின்னசாமி: பேரவைத் தலைவரவர்களே, கரூர் தாலுக்கா மிகப் பெரிய தாலுக்காவாக இருக்கிறது. தாலுக்காவினுடைய ஒரு கோடியிலிருந்து தலை நகரத்திற்கு வரவேண்டு

[1982 மார்ச் 15

மென்றால் சுமார் 30 மைல்களைக் கடந்து வர வேண்டியிருக்கிறது. அது பற்றிப் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். எவ்வளவு கால கட்டத்தில் அந்தப் பரிசீலனை முடிவடைந்து அது அமலுக்கு வரும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனை இப்பொழுது முடிந்திருக்கிறது. அதை இரண்டாகப் பிரிக்கிறபொழுது பரப்பு, பிற்பட்ட தன்மை, மக்கள் தொகை, நில வரி, நிர்வாக வசதி ஆகியவற்றிற்கு ஏற்றாற் போல் தாலுக்காக்களும் மற்றவைகளும் பிரிப்பதாக இருக்கிறது. இதைப் பற்றிய பரிசீலனை முடிந்து அரசு நடவடிக்கை எடுத்து உத்தரவு போடுகின்ற இடத்திற்கு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சின்னசாமி : பேரவைத் தலைவரவர்களே, அப்படிப் புதிய தாலுக்கா வரும் பொழுது அதற்கு என்ன பெயர் வைப்பதாக அரசு முடிவெடுத்துள்ளது ? எத்தனை பிர்க்காக்கள் சேர்க்கப்படும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கிருக்கின்ற தாலுக்காவில் 11 பிர்க்காக்கள் இருக்கின்றன. அதிலே அரவக்குறிச்சி, பள்ளப்பட்டி, கே. பரமத்தி, தென்னிலை, சின்ன தாராபுரம் ஆகிய ஐந்து பிர்க்காக்களை ஒரு தாலுக்காவாகவும், புகளூர், வெங்கல், கரூர், தாழம்பட்டி, வெள்ளியணை, தொரணக்கல் பட்டி ஆகிய 6 பிர்க்காக்களை ஒரு தாலுக்காவாகவும் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புதிய தாலுக்கா அலுவலகம் எந்த ஊரில் அமைக்கப்படும் என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருமணம் ஆகியிருக்கிறது. குழந்தை பிறக்கிற நேரமாகியிருக்கிறது. குழந்தை பிறந்த பிறகு அது ஆணா பெண்ணா என்று தெரிந்த பிறகு பெயர் வைக்கப்படும்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கரூர் தாலுக்காவை இரண்டாகப் பிரிக்கும் உத்தேசம் இருப்பதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அப்படிப் பிரிக்கப்படக் கூடிய தாலுக்காக்களில் ஒரு தாலுக்காவைப் பெரியார் மாவட்டத்தோடு இணைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் தற்போது இல்லை.